மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : மாதம் ரூ. 200 சம்பளத்திற்கு உட்பட்டவர்களுக்காவது இது போன்ற உதவியைச் செய்ய இனிமேலாவது ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதுவரையில் ரூ. 1,500 வரையில் தான் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் அரைச் சம்பளம் என்ற வகையில் சலுகை இருந்துவந்தது : தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்ட வகுப்பினர், பழங்குடி மக்கள் ஆகியோர்களைப் பொறுத்து, ரூ. 2,000 என்ற அளவுக்கு இந்தச் சலுகை வரம்பு இந்த ஆண்டு தான் உயர்த்தப்பட்டிருக்கிறது. மற்ற வகுப்பினர்களுக்குப் பொருளாதார அடிப்படையில் ரூ. 1,500 என்ற அடிப்படையில் இந்த ஆண்டு தான் பி. யூ. ஸீ.யில் இலவசச் சம்பள வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இப்பொழுது அதை உயர்த்துவதாக இல்லை.

* 299 வினு.—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்குக் கல்லூரி வரை இலவச கல்விச் சலுகை அளிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு வி. கே. கோதண்டராமன் : ஏற்கனவே ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு சகல துறைகளிலும் உதவி தருவதாக சொல்லப்பட்டு வந்தது. ஆக, இப்பொழுது இல்லை என்று சொன்னாலும், இனிமேலாவது அதை கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த ஏழை ஆசிரியர்களுடைய குழந்தைகளைப் படிக்க வைத்து முன்னுக்கு கொண்டு வருவதிலே கவனம் செலுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் கூறியபடி 1,500 ரூபாய்க்கு உட்பட்டு வருமானம் வருபவர்களுக்கு இந்த இலவசக் கல்விச் சலுகை கிடைக்கக்கூடும். ஆனால், இப்படி ஆசிரியர்களை மட்டும் எடுத்துக்கொண்டால், இதுபோன்று பல்வேறு தரத்தினர்கள் இருக்கிறார்கள். உதாரணமாக பொற்கொல்லர் வகுப்பினர், கைத்தறி நெசவாளர்கள் என்று பல்வேறு தரத்தினர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கும் பொழுது எல்லா மக்களுக்கும் இலவசக் கல்வி என்ற நிலை வரும்பொழுது தான், இந்த யோசனை பொருந்தி வருமே தவிர, ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு பார்த்தால் நிதி வசதி இடம் கொடுக்காத நிலைதான் இருக்கும்.

திரு. கே. விநாயகம் : ஆசிரியர்கள் தான் நாட்டிலிருக்கிற கல்லாமையை ஒழிப்பதற்குக் காரணமாக இருக்கின்ற கருவிகளாக கருதப்படுகிறார்கள். அவர்கள் குழந்தைகள் பள்ளிகளில் இலவசமாக படிக்கமுடியாத அவல நிலை நம்முடைய அரசாங்கத்திற்கு வந்து விட்டதா ? அறியாமையை போக்குவதற்குக் காரணமாக இருக்கிறார்களே அவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்கு வேண்டிய பொருளாதார வசதி, அது உடையாக இருந்தாலும் சரி. புத்தகமாக இருந்தாலும் சரி, கல்லூரி, பாடசாலை கட்டணம், சம்பளமாக இருந்தாலும் சரி, இலவசமாக எல்லா ஆசிரியர்களுக்கும் (ஃப்ரம் தி எலிமென்டரி ஸ்கூல் டீசர் அப் டு தி காலேஜ் லெவல்) செய்துகொடுப்பதற்கான ஒரு தனித் திட்டத்தை இனியாகிலும் தீட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆசிரியர்களுக்கு அவர்கள் பார்க்கிற வேலைக்கு ஊதியம் தரப்படும் நிலைமையும் கவனிக்கப்பட்டு வருகிறது. அதைப் பொறுத்து இதே நிலையில் இருப்பவர்கள் சமுதாயத்தில் பல்வேறு தரத்தினர், வகையினர் இருக்கிறார்கள். அப்படிப் பலரையும்

உள்ளடக்கிக்கொண்டு தான் ஜனநாயக அரசாங்கம் ஒரு முடிவு எடுக்க வேண்டுமே தவிர, ஆசிரியர்களுக்கு, கல்லூரி ஆசிரியர்களுக்கு ரூ. 600, 700 சம்பளம் வாங்குபவர்களுடைய பிள்ளைகளுக்கு இந்தச் சலுகை அளித்தால், சமுதாயத்திலுள்ள அதைவிட குறைந்த வருமானம் உள்ளவர்கள் அந்தச் சலுகை தங்களுடைய பிள்ளைகளுக்கும் அளிக்கப்படவேண்டும் என்று கோருவார்கள், அதில் நியாயமும் இருக்கும். ஆகவே, நிதி வசதி வளர வளரத்தான் இப்படிப்பட்ட முயற்சி கவனிக்கப்படவேண்டியதாக இருக்கும்.

திரு. ஆலடி. அருணா : மாணவர்களுக்கு இலவசமாக புத்தகம் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஸ்வீடன் நாட்டிலிருந்து மத்திய அரசாங்கத்தின் மூலம் இந்த மாநில அரசுக்கு முன்னால் பேப்பர் கொடுக்கப்பட்டது. ஆனால், மத்திய அரசினுடைய விதிகளுக்கு மாறாக, முன்னிருந்த மாநில அரசு அந்தப் புத்தகங்களை மாணவர்கள் மத்தியில் விற்பனை செய்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக பொதுக் கணக்குக் குழு தன்னுடைய ஆட்சேபணையை தெரிவித்திருக்கிறது. இந்த விற்பனைக்குக் காரணமாக இருந்த அதிகாரிகள் அல்லது முன்னாள் கல்வி அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்கும் இந்த உப கேள்விக்கும் தொடர்பு இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது. அதனால் அவர்களுக்கு அவர்களுடைய பிள்ளைகளை வெளி ஊர்களில் படிக்க வைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அதை உத்தேசித்தாவது ஆரம்ப ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு கட்டாயம் அரசாங்க ஹாஸ்டலில் இடம் கொடுப்பதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் சொல்லியபடி இப்பொழுது அத்தகைய யோசனை இல்லை. சமுதாயத்தில் இருக்கிற பல தரப்பினர்களை மனதில் வைத்துக்கொண்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய நிலை ஏற்படும்.

Thiru T. MARTIN : May I know from the Hon. Minister whether the Government will come forward at least to help the children of teachers who have got more than 5 children in the matter of education?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த எண்ணிக்கையைப் பொறுத்தல்ல. அரசாங்கத்தினுடைய எண்ணிக்கையே குறைந்தது 2 குழந்தைகள், 3 குழந்தைகள் இருக்க வேண்டும் என்பது தான். 3 குழந்தைகளுக்கு மேற்பட்டு குழந்தைகள் உள்ளவர்களுக்கு சலுகை இல்லை என்று வேறு சில மாநிலங்களிலே உள்ள அரசினர் முடிவு செய்திருக்கின்றனர். எனவே, குழந்தைகளுடைய பிரச்சினையை வைத்து இதில் முடிவு எடுப்பதற்கில்லை.

திரு. எம். சுரேந்திரன் : ஸ்காலர்ஷிப் ரூ. 1,500 என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இந்த வருமானம் பல்வேறு விதத்தில், முறையில் வருகின்றவர்களுக்கு, அடிப்படை வருமானத்தை மட்டும் கணக்கிடப்படுமா அல்லது அவர்களுக்கு மேற்கொண்டு வருகிற பஞ்சப்படி, போனஸ் போன்ற பல்வேறு விதங்களில் வருகிற வருமானத்தையும் சேர்த்துக் கணக்கிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக வருமானம் என்று இருப்பதால், அவர்களுக்கு எல்லா வகைகளிலும் வருகின்ற வருமானத்தையும் சேர்த்துத்தான் கணக்கிடப்படும்.